**Spl.SC.No. 33/2019** Dated:. 05.03.2025

( 2 ஆவது எதிரி ஆஜர். 1 மற்றும் 3 ஆவது எதிரிகள் ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355 ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது,.)

**அ.சா.2 டாக்டர்.ஆறுமுகம்** மனுவின் அடிப்படையில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

நான் 30 வருடங்களுக்கு மேலாக அரசு மருத்துவராக பணிபுரிந்துள்ளேன். இராமநாதபுரத்தில் அரசு மருத்துவராக பணியில் இருந்தேன். எனது வீடு பரமக்குடியில் உள்ளது. நான் பணியில் இருந்தபொழுது முதுகுளத்தூர் நகரில் தனியாக கிளினிக் வைத்து நடத்தி வந்தேன். ஆரம்பகாலத்தில் மேற்படி கிளினிக் முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு அருகில் இருந்தது என்றால் அவ்வாறு இல்லை. முதுகுளத்தூர் தேரிருவேலி ரோடில் பவித்ரா கிளினிக் என்ற பெயரில் கிளினிக் நடத்தி வருகிறேன். முன்னாள் முதுகுளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலங்காரம் எனக்கு தெரிந்தவர்தான். அவர் எனக்கு உறவினர் என்றால் சரியல்ல. எனது பூர்விகம் ஆர்.எஸ்.மங்கலம் அருகில். முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் இரண்டு முறை மருத்துவராக பணியமர்த்தப்பட்டு பணி செய்துள்ளேன். நான் அங்கு பணிபுரிந்தபோது சுற்று வட்டாரத்தில் உள்ள பலபேரை எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். கஷ்டப்படும் நபருக்கும் மருத்துவ சிகிச்சை செய்து நல்ல பெயர் பெற்றுள்ளேன். என் திறமைக்கு உட்பட்ட வியாதிகளுக்கு என்னால் முடிந்தவரை மருத்துவம் செய்வேன். இல்லாவிடில் மேல் சிகிச்சைக்கு பரிந்துரைப்பேன். நான் குழந்தைக்கான சிகிச்சை வழங்கும் மருத்துவ படிப்புதான் படித்துள்ளேன். பல நபருக்கு நான் மருத்துவ சிகிச்சை செய்வதால் அந்த பகுதியில் எனக்கு மதிப்பு மரியாதை உண்டு. பல இனத்தை சேர்ந்த நபர்களுக்கு நான் மருத்துவ சிகிச்சை செய்துள்ளதால்

பொதுமக்களிடையே எனக்கு நல்ல மரியாதை இருப்பதால் என்னை என்ன சாதி என்று பார்த்து பழகுவதில்லை. நானும் சாதி பார்க்கும் பழக்கம் ஆதியில் இருந்தே இல்லாத நபர்தான். அங்கிருந்த மக்களும் என்னிடம் நல்ல முறையில்தான் பழகி வந்தனர் என்றால் சரிதான். என்னிடம் அவர்கள் எந்தவிதத்திலும் சாதி பாகுபாடு பார்த்தது இல்லை. நான் சிகிச்சை அளித்த வகையில் யாருக்கும் சரியாகாமல் இருந்தது இல்லை. அவ்வாறான சம்பவம் எதுவும் இல்லை. என் அனுபவத்தில் அவ்வாறு சில மருத்துவ தவறுகள் அதாவது நான் சிகிச்சை அளித்தும் சரியாகாமல் இருந்திருக்கலாம். அவ்வாறு சில சம்பவங்கள்தான் என் பணிகாலத்தில் இருந்திருக்கலாம். 05.12.2018 ல் 2,3 ஆவது எதிரிகள் என் கிளினிக்கிற்கு அவர்களது குழந்தையை சிகிச்சைக்காக கொண்டு வந்தனர். இரண்டு நாட்கள் அந்த குழந்தைக்கு நான் சிகிச்சை அளித்தேன். அவர்களது குழந்தைக்கு நான் அளித்த சிகிச்சை பேரில் பாதிப்பு ஏற்பட்டு மதுரை மீனாட்சி மிஷின் மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அழைத்து செல்லும் நிலை ஏற்பட்டது என்றால் சரியல்ல. அந்த குழந்தைக்கு நான் தவறாக பிரிஷ்கிரிப்சன் அளித்திருப்பேன் என்றால் சரியல்ல. என் பெயரில் நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு எதிரிகள் தரப்பில் என் பெயரில் மருத்துவ சிகிச்சையில் தவறு ஏற்பட்டது கண்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. நான் தவறான சிகிச்சை அளித்ததாக காவல்நிலையத்திலும், எதிரிகள் கொடுக்க செல்வதாக சொன்னதன் அடிப்படையில் என் மருத்துவ பணிக்கும், குடும்பத்திற்கும் கலங்கம் ஏற்படும் என்பதால் எதிரிகள் மீது நான் நடக்காத சம்பவத்தை குறித்து புகார் என் தூண்டுதலின் பேரில் கொடுக்கப்பட்டதா என்றால் சரியல்ல. என் மகன்தான் புகார் கொடுத்துள்ளார். ஜெகதீஸ் சந்திரா என்

மகன். என் மகன் புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியும். எந்த தேதியில் புகார் கொடுக்கப்பட்டது என்று ஞாபகம் இல்லை. சுமார் 6 வருடம் இருக்கும் என்பதால் ஞாபகம் இல்லை என்று சாட்சியம் அளிக்கிறார். சம்பவ நேரத்தில் நான் பரமக்குடியில் இருந்தேன். சம்பவ இடத்திற்கு போலீசார் வந்த தகவல் கிடைத்த பிறகுதான் சம்பவ இடத்திற்கு நான் சென்றேன். போலீசார் சம்பவ இடத்திற்கு வந்துதான் புகாரை பதிவு செய்தனர். அதில் என் மகனிடம் கையெழுத்து வாங்கினார். அதில் கண்ட விவரங்கள் போலீசால் பதிவு செய்து கொண்டபின் என் மகன் அதை படித்து பார்த்து விவரங்கள் தெரிந்த பின்தான் கையெழுத்து செய்தார். என் மகன் பி.இ.எம்.பி.ஏ படித்துள்ளார். அவரது படிப்பிற்காக அந்த இடத்தை அன்னறய தினம் என் மகன் உபயோகப்படுத்தியுள்ளார். அந்த கிளினிக்கிற்கு முழு உரிமையாளர் நான்தான். 07.12.2018 மற்றும் 08.12.2018 ஆகிய தேதிகளில் சம்பவ இடத்தில் நடந்த விவரங்கள் பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. என் முன்விசாரணையில் நான் எதிரிகள் சாதியை சொல்லி என் மகனை திட்டியதாகவும், தெரிவித்துள்ளேன். அந்த விவரத்தை போலீசார் சொல்லி கொடுத்ததன் அடிப்படையில் முன்விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 1ஆவது எதிரி சம்பவ தினத்தன்று கேட்டை அடித்து சேதப்படுத்தியதாகவும், வழக்கிற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2, 3 எதிரிகள் என்னிடம் உதவியாளராக ஏற்கனவே பணிபுரிந்ததால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று நான் போலீசாரிடம் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் அவர்களது குழந்தைக்கு தவறான சிகிச்சை அளித்ததாகவும் அதனால் என் மீதும், என் கிளினிக் மீதும் தவறாக புகார் கொடுத்து கலங்கமான பெயர் ஏற்படும் என்பதால் அதிலிருந்து தற்காத்து கொள்ள என் மகனை வைத்து ஒரு பொய்யான புகாரை காவல் துறை பதிவு

செய்து பதிவு செய்யப்பட்ட வழக்கில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு கொடுக்க வேண்டும் என்றே எண்ணமே இல்லை. வழக்கு கொடுக்கவோ, மேல்நடவடிக்கை எடுக்கவோ எனக்கு எவ்வித எண்ணமும் இல்லை என்று சாட்சியம் அளிக்கிறார். என் மகனையோ, என்னையோ எதிரிகள் சாதியை சொல்லி திட்டவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:–** இல்லை

Taken down to my dictation, in my presence
and hearing and under my personal direction
and superintendence and interpreted to the witness
in the presence of the accused and admitted to the
witness to be correct.

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)